"இதயம் இயங்காவிடின் மனிதம் இயங்க முடியாது"
"உழைப்பவர் இயங்காவிடின் உலகமே இயங்க முடியாது"

# இதயநாதம்

இதயம் : 01 | வைகாசி - 2008 | பக்கங்கள் : 10 | நாதம் : 1

21 OCT 2008

# யாழில் சமுர்த்தி நிவாரணம் அதிகரித்து வழங்கப்படுமா?

## கேள்வி எழுப்புகின்றனர் பயனாளிகள்

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெற்றுவரும் குடும்பங்கள் தமது நிவாரணத் தொகையை அதிகரித்து வழங்கவேண்டும் என்று அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பர்ழ்.குடாநாட்டில் தற்போது சமுர்த்தி நிவாரணம், நலிவுற்றோர் நிவாரணம், 2006 ஓகஸ்ட்டுக்கு பின் இடம்பெயர்ந்தோர் நிவாரணம், 2006 ஓகஸ்ட்டுக்கு முன் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் மற்றும் கடற்றொழிலாளர் நிவாராணம் எனப் பலவகையாக வகைப்படுத்தப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டுவருகின்றது.

இவற்றில் சமுர்த்தி நிவாரணம் பெற்றுவரும குடும்பங்களே மிகவும் பாதிக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறத் தகுதியுடைய குடும்பங்களாக இனங்காணப்பட்டபோதும் அவர்களுக்கான நிவாரணத் தொகை இதுவரை அதிகரித்து வழங்கப்படவில்லை என்று பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நலிவுற்றோர் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான நிவாரணம்

(10 ஆம் பக்கம் பார்க்க)




## இதயத்தின் முதல் பிரசவம்

மனிதனின் உடலின் எந்த அங்கங்களும் செயலிழக்கும்போது அல்லது அது இல்லாமல் போகும் சந்தர்ப்பத்திலும் மனித உடல் உயிர்வாழ முடிகிறது. ஆனால் இதயத்துடிப்பு செயலிழக்கும் போது மனித உடல் செயலி ழந்துபோகிறது. அதுபோல் உலகம் எவ்வளவுதான் புதிய புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைச் செய்து நவீனங்கள் படைத்தாலும் உழைக்கின்ற தொழிலாள மக்கள் உழைக்காது போனால உலகமே இயங்கமுடியாது. செயலற்று நின்றுவிடும். ஆய்வாளர்கள் 'மூளை உழைப்பாளர்கள்', 'உடல் உழைப்பாளர்கள்' என வகைப் பாடுகள் செய்தபோதும் உலகத்தின் இயங்கு சக்தியின் மூலவேராக விளங்குபவர்கள் உடல் உழைப்பால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் உழைபபாளர்களே. இவர்கள் மனித இதயத்திற்கு ஒப்பானவர்களே.!

இதயநாதம் பத்திரிகை கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் அதிகாரபூர்வமான வெளியீடாகும். உழைக்கும் மக்களுக்கான மாதாநதப் பத்திரிகையாக இதுவெளிவருகிறது.

## உழைக்கும் மக்களின் ஊடகக் குரல்



சமூக மேம்பாட்டுக்கான அறிவு வெளிச்சத்தினைத் தருவதில் ஊடகங்களின் இடம் இன்றியமையாதது. இந்த வகையில் உழைக்கும் மக்களின் குரலாய் இதயநாதம் என்ற இதழ் வெளிவரும் செய்தி மகிழ்ச்சி தருகின்றது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இதய நாதத்துக்கு வழங்கிய ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கஞ்சி குடிப்பதற் கில்லார் - அதன்
காரணம் யாதென்ற அறிவுமிலார்

என்று ஏங்குவானே பாரதி. அந்த காரண அறிவு அனைத்து மக்களினதும் வசமாக வேண்டும்.

இந்த காரண அறிவு பற்றிய விழிப்பினைத் தந்து உழைக்கும் மக்களின் உயர் வென்ற தன் இலக்கினில் இதயநாதம் வெற்றிக்கனிகளை கான என்றென்றும் அன்பான வாழ்த்துக்கள் என்றார்.

## தொழிலாளரின் இதயமாக ஒலிக்கட்டும்



அன்றிலிருந்து இன்றுவரைக்கும் காடுகள் வெட்டி நிலங்களை திருத்தி நாட்டுக்கு வளம் சேர்த்த ஒரு வளமான மக்கள் சமூகம். இன்று வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியற்ற நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது இவ்வாறு யா.மா.கி.உ.சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான மு.சின்னராசா இதய நாதத்துக்கு வழங்கிய ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாளும் வறுமையோடு போராடிக்கொண்டு துன்ப துயரங்களையே மிச்சமாக சுமந்து நிக்கும் உழைக்கும் தொழிலாளவர்க்கத்தின் முன்னேற்ரத்திற்கும் சமூக மாற்றத்திற்கும் வழிகாட்ட இன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் அதிகார பூர்வ ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயம் இயங்காவிடின் மனிதம் இயங்க முடியாது"
"உழைப்பவர் இயங்காவிடின் உலகமே இயங்க முடியாது"

# இதயநாதம்

## உழைப்போரின் தோழன்

எத்தனையோ பத்திரிகைகள், சஞ்சிகை கள்வெளிவந்த போதி லும் உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை சொல்லக்கூடிய - அந்த சக்திகளை சமூகத் தளத்திலோ அல்லது தேசிய அரசியல் பொருளாதாரத் தளத்திலோ முதன்மைப்படுத்தக்கூடிய - கௌர வப்படுத்தக் கூடிய வெளியீடுகள் இதுவரை வெளிவந் திருக்க வில்லை. இது ஒரு பெரும் இடைவெளி யாகவே காணப்படுகிறது. இந்தவெளியை நிரப்பவேண்டிய கடமையும் பொறுப்பும் கிராமிய உழைப்பாளர் சங்கத்திற்கு ஏற்பட்டுள் ளது. இதன் பொருட்டு பத்திரிகை வெளிவரு வதை கட்டாயப்படுத்தியது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதா ரண சூழ்நிலையின் தொடர்ச்சியும், பொருளாதார நெருக்கடியும் இடம்பெயர் வாழ்கை யும் அன்றாடம் உழைப்பை நம்பிவாழ்ந்த மக்களுக்கு பாரிய வாழ்க்கை சுமைகளை தோற்றுவித்துள்ளது. இந்த விடயங்களை பொதுப் படையான பிரச்சனைகளுக்கப்பால் உழைக் கின்ற வறிய கூலி விவசாய மக்களின் நிலையில் நின்று உணர்வுடன் பேச வேண்டிய அவசியத்தின் காரணமாக பிரச்சனைகளை வெளிக் கொணரவும் அவர்களுடன் பேசவும் இதய நாதம் பிரசவிக்கின்றது. இதுபற்றி உங்களிடமிருந்து ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் ஆக்கங்களையும் இதயநாதம் வரவேற்கின்றது.

# உழைப்பாளர் உயர்வுக்கு வழிகாட்டவேண்டும்



கிராமிய உழைப்பாளர் சங்கம் தனது அமைப்பின் சார்பில் இதய நாதம் என்ற பெயரில் பத்திரிகையொன்றை வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராக நான் இருந்த காலத்திலேயே பத்திரிகை ஒன்றை நடத்தவேண்டும் என்ற நோக்கம் சங்கத்திடம் இருந்தது அந்நோக்கம் இன்றுதான் நிறைவேறியுள்ளது இவ்வாறு சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் இதயநாதத்துக்கு வழங்கிய வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிராமிய உழைப்பாளர் கள் எதிர் நோக்கும் முக்கிய ஒடுக்கு முறைகள் மூன்றாகும் அவர்கள் ஒரேநேரத்தில் சமூக ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை என்பவற்றுக்கு முகம்கொடுக் கின்றனர். எனவே கிராமிய உழைப்பார்களது பயணம் இம்மூன்றிலிருந் தும் விடுதலை பெறுவதை நோக்கிச் செல்ல வேண்டும் எனினும் இன ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டம் வலுவடைந்த நிலையில் அப் போராட்டத்தினுள் தங்களது தனித்துவமான அடையாழங்களைப் பதிக்க கிராமிய உழைப்பாளர்கள் தயங்கக்கூடாது. அப்பதிவின் மூலம்தான் இனப்பிரச்சனைத்தீர்வில் தங்களுக்கான பங்கினை அவர்கள் உரிமையுடன் பெற்றுக் கொள்ள முடியும். தொடர்ந்து ஏனைய ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டத்தளங்களையும் நிறுவிக் கொள்ள முடியும்.

கிராமிய உழைப்பாளர்கள் தங்ளுடைய பிரச்சனை களை விரிந்த தளத்தில் பார்ப்பதற்கு சங்கத்தின் பத்திரிகை வழிகாட்டவேண்டும். குறிப்பாக யாழ்.மாவட்ட மட் டத்தில், வடகிழக்கு மட்டத்தில் தென்னாசியப் பிராந்திய மட்டத்தில், சர்வதேச மட்டத்தில் பார்ப்பதற்கு வழிகாட்டவேண்டும் அப் போதுதான் கிராமிய உழைப்பாளர்கள் தங்கள் பிரச்சனைகளின் சர்வ தேசரீதியான தாக்கத்தினை தரிசித்துக்கொள்ள முடியும். இந்த வகையில் இப்பத்திரிகைக்கு மூன்று பிரதான கடமைகள் இருக்கின்றனவென நான் நினைக்கிறேன்.

1.கிராமிய உழைப்பாளர்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனை களை வெளிக்கொண்டு வருதல் குறிப்பாக போர் நெருக்கடியினால் படும் அவலங்களை.

(10 ஆம் பக்கம் பார்க்க)




வானம் பொழியுது பூமி விளையுது
நாம வாடி வதங்கி வளப்படுத்துறோம் வயலை
ஆனால் தானியம் எல்லாம் வலுத்தவனுடைய கையிலே
[illegible]வதெப்போ தீருவதெப்போ நம்மக் கவலை

*மக்கள் கவிஞன் - பட்டுக்கோட்டை*

# க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்


உரும்பிராய் வடக்கு சரஸ்வதி கிராமத்தில் க.பொ.த.(சா.த) - 2007 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை சரஸ்வதி சனசமூக நிலையம் அண்மையில் பரிசு வழங்கி பாராட்டிக் கௌரவித்துள்ளது.

நடந்த 18 ஆம் திகதி நிலைய மண்டபத்தில் அதன் தலைவர் க.ரஞ்சன் தலைமையில் மேற்படி கௌரவிப்பு விழா நடைபெற்றது.

சமூகத்தின் கல்வி பொருளாதார, கலாசார பண்பாட்டு விழுமியங் களின் உயர்வுக்காக உழைத்துவரும் சரஸ்வதி சனசமூக நிலையத் தின் மேற்போன்ற முன்மாதிரியான செயற்பாட்டை பெரிதும் வரவேற் பதுடன், பல்வேறு கஸ்ரங்கள், வறுமை நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்களையும் இதயநாதம் பாராட்டுகின்றது.


சி.ஜெனிற்றா


க.லாவண்யா


த.அகில்


த.றஜீகரன்


சி.தனுசியா


[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏருழவன்

# உலக நாடுகளில் உணவுக் கலக அபாயம்!

உணவுப்பொருட்களின் விலைகள் படு வேகமாக அதிகரித்து வருவதன்விளைவாக உலகில் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலவரம் குறித்து அண்மையில் உலகவங்கியும் சர்வ தேச நாணய நிதியமும் விடுத்திருக்கும் எச்ச ரிக்கை இன்று நிலவும் முன்னென்றுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கவ னத்தைப் பெரிதும் தூண்டுவதாக இருக்கிறது. உணவு விலைகளில் காணப்படுகின்ற துரித அபிவிருத்தி வறியநாடுகளில் 10 கோடிக்கும் அதிகமான மக்களை மேலும் படுமோசமான வறுமை நிலைக்குள் தள்ளிவிடக்கூடும். என்று உலகவங்கியின் தலைவர் றொபேர்ட்ஸ்ஸிக் தெரிவித்திருக்கும் அதேவேளை பல லட்சக் கணக்கான மக்கள் பட்டினிகிடக்க வேண்டிய அபாயநிலை தோன்றப்போகிறது என்று சர்வ தேச நாணய நிதியத்தின் தலைவர் டொமி னிக்ஸ்ரோஸ் - கான் குறிப்பிட்டிருக்கிறார்.

உலகின் உணவு விலைகள் கடந்த சில மாதங்களில் மிகவும் கடுமையாக அதி கரித்திருப்தாகவும் சில நாடுகளில் நிலவிய சீரற்ற காலநிலையின் விளைவாக பயிர்கள் அழிந்து போனமையும், போக்குவரத்துப் பயன் பாட்டுக்கான எரிபொருளுக்காக பயிர்களை வளர்ப்பதற்கு நிலயங்களை பயன்படுத்தும் போக்கு அதிகரிக்கின்றமையும் இந்தவிலை உயர்வுகளுக்கு முக்கியகாரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. கோதுமை, நெல், சோளம் போன்ற முக்கியமான உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பினால் ஒட்டுமொத்த உணவு வகை களின் விலைகளில் கடந்த மூன்று வருடங்க ளில் 83 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக உலக வங்கி தெரிவித்திருக்கிறது.

உணவு விலை அதிகரிப்புக் காரணமாக எகிப்து,ஐவறிகோஸ்ட்,எதியோப்பியா மற்றும் இந்தோனேசியா உட்பட பல நாடுகளில் ஆர்ப் பாட்டங்களும் கலகங்களும் மூண்டிருந்தன. கரிபியன்தீவான ஹெய்ட்டியில் தோன்றிய வன்முறைகளில் ஐந்துபேர் மரணமடைந் ததுடன் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். இறுதியில் உணவுக்கலகம் காரணமாக ஹெய்டி அரசாங்கம் கூடவீழ்சியடைந்து விட்டது. இந்தியா,சீனா,வியட்நாம் மற்றும் எகிப்து போன்ற பிரதான நெல் உற்பத்தி நாடுகளில் அரிசி ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பங்களாதேஷ், பிலிப் பைன்ஸ் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற இறக்குமதி நாடுகள் அந்தக்கட்டுப்பாடுகளின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின் றன. உணவு மற்றும் எரிசக்திவிலைகள் அதி கரிப்பு மற்றும் உலகளாவிய நிதிச்சந்தைக ளில் பெரும்குழப்பநிலையை தோற்றுவித் திருக்கும் கடன் நெருக்கடியின் விளைவாகத் தோன்றியிருக்கும் நிலவரத்தை ஆராய்வதற் காக உலகவங்கியும் சர்வதேசநாணயநிதிய மும் சில மாதங்களுக்கு முன் முக்கியமான கூட்டங்களை நடத்தியிருந்தன.

சர்வதேச உணவுநெருக்கடியை கையாளு வதற்கு உலகவங்கியின்தலைவர் முன் மொழிந்திருக்கும் புதிய ஏற்பாட்டை வாஷிங்ட னில் நடைபெற்றகூட்டத்தில் வங்கியின் நிதித் துறை வழிகாட்டல் குழுவும் அபிவிருத்தி அமைச்சர்களும் அங்கிகரித்திருக்கிறார்கள். வறியநாடுகளில் மக்களுக்கு உணவை வழங்குவதற்காக கூடுதல் உதவிகளை கேட் டிருக்கும் உலகவங்கியின் தலைவர் உலக உணவுத்திட்டத்தின் நிதியில் ஏற்பட்டிருப்ப தாக மதிப்பிடப்பட்டிருக்கும் 50 கோடி அமெ ரிக்க டொலர்கள் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வதற்கு தனவந்த நாடுகள் விரை வாகத் தங்களது பங்களிப்பைச்செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதேவேளை பல இலட்சக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் ஆபத் தான நிலை தோன்றப்போவதாக எச்சரிக்கை செய்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் உணவுப் பொருட்களின் விலைக ளில் தொடர்ந்தும் கடும் அதிகரிப்பு ஏற்படு மானால் அதனால் தோன்றக்கூடிய ஏனைய பாதக விளைவுகள் குறித்தும் உலக நாடு களுக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்.

கடந்தகால அனுபவத்தை அடிப்படை யாகக்கொண்டு நோக்குகையில் இத்தகைய நிலவரம் சில சந்தர்ப்பங்களில போரில் கூட முடிவடையலாம் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதனிடையே பிலிப்பைன்ஸில் தலைமை யகத்தைக்கொண்டிருக்கும் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம், அரிசி விலை குறை வடைவதற்கான சாத்தியம் கிடையாது என்று அபாய அறிவிப்பொன்றைச்செய்திருக்கிறது.



முக்கிய உணவுப்பொருளான அரிசியின் உற்பத்தியைவிடவும் அதற்கான கோரிக்கை பலமடங்கு அதிகமாகஇருப்பதால் அரிசிவிலை தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டேயிருக்கும் என்று அந்தநிறுவனம், றைஸ்ருடே என்ற அதன் பிரசுரத்தில் தெரிவித்திருக்கிறது.

கடந்தவருடம் அரிசிவிலை 70சதவீதத்தி னால் அதிகரித்திருந்தது. அண்மைய வாரங்க ளில் அரிசிவிலையில் ஒருவிததுரித அதி கரிப்பை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அரிசி உற்பத்திசெய்யும் பல நாடுகள் ஏற்று மதி மீது கட்டுப்பாடுகளை விதித்திருக்கின் றன. அரிசி உலகளாவிய ரீதியில் 300 கோடிக் கும் அதிகமான மக்களுக்கு பிரதான உண வுப்பொருளாக இருக்கிறது. அரிசி உற்பத் தியை அதிகரிப்பதற்கான ஆராய்சிகளில் கூடு தல் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் தெரி வித்திருக்கிறது .

உணவு விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பின் விளைவாக வறியநாடுகளில் தோன்றகூடிய நெருக்கடிகள் குறித்து உலக வங்கியும் சர்வதேச நாணய சபையும் விடுத் திருக்கும் அச்சுறுத்தல்களையும் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் அரிசி விலை தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டேயிருக்கும் என்று விடுத்திருக்கும் அறிவிபபை நோக்கும் போது உலகளாவியரீதியில் பாரதூரமான நெருக்கடி தோன்றப்போகிறது என்பதை உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. இந்தநெருக்கடியின் தெளிவான அறிகுறியை நாம் ஏற்கனவே கண்டுவிட்டோம்.

இன்று இலங்கையில் தோன்றியிருக்கும் முன்னென்றுமில்லாத பொருளாதார நெருக்கடி யின் விளைவாக வாழ்க்கைச்செலவு அதிகரிப் பினால் மக்கள் திணறிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தைத்தரக் கூடிய ஒருசில நடவடிக்கைகளை மேற்கொள் வதற்குக்கூட திராணியற்றதாக அரசாங்கம் இருக்கிறது. பாண் பாவனையில் 50சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைவதாக அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தமை நாட்டுமக்கள் எதிர் நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியை உணர்ந்துகொண்ட, ஒரு தலைவரின் உணர்வு வெளிப்பாடாக எம்மால கருதமுடியவில்லை. உலகில் பல நாடுகளில் உணவுக் கலகம் மூளக்கூடிய அபாயம் குறித்து உலகவங்கி யும் சர்வதேச நாணய நிதியமும் விடுத்த எச சரிக்கையின் பாரதூர தன்மையை புரிந்து ணர்ந்துகொள்ளக்கூடிய அரசியல் பக்குவமும் முதிர்ச்சியும் அரசாங்கத்தலைவர்களுக்கு இருக் கிறதா என்ற சந்தேகம் எமக்கு இயல்பாகவே ஏற்படுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களையும் வாழவிடுங்கள்

என் வலிகளுக்கு மட்டும்
வார்த்தைகள் இருக்குமானால்
நீதி தேவதை என்றோ மரணித்திருப்பாளே!
மிருகவதை புரியாதே என்று
போர்க்கொடி தூக்குவோர்
மனிதவதை புரியாதே என்று
போர்க்கொடி தூக்கியிருந்தால் - என்
கற்பு சூறையாடப் பட்டிருக்காதே
மனித உரிமை பேசுவோர்
மனிதனை மனிதனாக மதித்திருந்தால்
புதை குழிகள் புலர்ந்திருக்காதே
கைகள் விலங்கிடப்பட்டு கலிகால
துச்சாதனர்களால் துகிலுரிந்த கொடூரம்
ஒரு முறையேனும் அனுபவித்திருக்கின்றீர்களா?
கசக்கி எறியப்பட்ட கன்னி மலர்களின்
கதறல் துடிப்பை கேட்டிருக்கிறீர்களா?
வறுமை தின்று .எஞ்சிய எம் வாழ்வை
அடிமை செய்யும் கொடுமை போதும்.
எங்களை உணர்வுள்ள ஒரு
ஜீவனாக மதியுங்கள்
பேரம் பேசாதீர்கள்
எங்களையும் வாழவிடுங்கள்
இவ்வுலகில்!


த.வனஜா

## உழைப்பாளி

இறுகிப்போன இரும்புப்பாறையும் - உன்
கரம்பட்டால் சிரிக்கும் ஓவியமாய்
உன் வாழ்க்கைமட்டும் ஓயாத புலம்பலுடன்...
உழைத்துச்சிவந்த உன் கரங்களை மறந்துவிட்டு
உயரத்தை எட்ட உலகம் சுற்றுது.
நாள்தோறும் வியர்வை சிந்தி உழைத்தாலும்
வீட்டில் அரைவயிற்றுக்கும் திண்டாட்டம்தான்
இத்துப்போன குடிசை வீட்டின் எஞ்சியுள்ள
ஈர்க்குகளின் வழியே வானம்
ஓடும் மேகம் மின்னும் நட்சத்திரக்கூட்டம்
எல்லாம் மல்லாக்காக படுத்தபடி
வேடிக்கை பார்க்கமுடியும்.
ஓயாத மழையில் ஒழுகும்
நீர் முத்துக்கள் நின்றுபோனாலும் - உன்
விழி நீர் நின்று போகாது.
பசியெடுத்தா பால்குடிக்கும் குழந்தையும் கூட
தாயின் வருகைக்காகத்தான் தவமிருக்கவேணும்.
கூலிக்கார வீட்டில் அவதரித்த பாவத்துக்காய்.
உயிர் உறையும் பனியிலும் கூட
வியர்வை சிந்தும் உடல்கள் கொண்ட
மனிதன் உழைப்பாளி ஆவான்.
அவன் வாழ இவ்வுலகில் வழியில்லையோ?

- ந.சந்திரகலா

## போதைவழியால்...



குடியென்ற பொல்லாப்பின்
குறுவழிப்போக்காலே
குற்றங்கள் மேலோங்குமே
வடி கசிப்பு பானமது
வடிவற்ற புகைத்தலும்
வருமானமதனை முடிக்குமே
துடிதுடிப்பு அன்னேரம்
தூக்கங்கள் பின்னேரம்
துயரங்கள்தான் மிஞ்சிடும்
தடியடிகள் வீண்பேச்சு
தகராறுகள் என்றெல்லாம்
தானாக அரங்கேறிடும்
அடிபிடிகள் தொல்லைகள்
அழுக்கான நடத்தைகள்
அன்றாடம் நிகழ்ந்தேறிடும்
உன் படிக்கின்ற பிள்ளைகளின்
பண்பாட்டுச் சூழல் அதை
பாளாக்கி விட்டுச் செல்லும்
பிடிவாதக்குடி குடிக்கும்
பிரமாத வெறியா - உன்
பிள்ளை பெண்சாதி பாரடா - அவர்
வடிக்கின்ற கண்ணீரை
வடிகட்டிக் குடித்துப்பார்
வல்லநல் போதை தருமோ? - மனித
முடிவென்ற முன்னாலே
முழுதான வாழ்வுண்டு
முற்றாக அறிந்து வாழ
விடிகின்ற விடிவோடு
விலக்கிடு குடிதனை
வியத்தகு வாழ்வை ஆள

- மானியூர் ரட்ணேஸ்

## மாற்றம் ஒன்றே...

தொழிலாளர் தினம் மே ஒன்று
தொழிலே இல்லாமல் நாம் இன்று.
A9 பூட்டியதால்
உள்ள தொழில் நாமிழந்தோம்
விளை நிலமோ சுடுகாடாய்!

தொழிலாளர் தினம்
எத்தனையோ நாம் கண்டோம்
மாற்றம் என்ன நாம் கண்டோம்
உள்ளவர் வாழ்வு கொண்டாட்டம்
இல்லாத நாமோ திண்டாட்டம்!

மண்வெட்டியும் அரிவாளும்
தூக்கிய கரங்கள் - இன்று
ஓய்ந்து விட்டதையா!
ஒருவேளை சோற்றுக்காய்
நாயாய் அலைந்து
ஓட்டமாய் ஓடி - கடைசியிலும்
வெறுங்கையுடன் வீடு வர
பிள்ளைகளோ பசியால் துடிக்கும்!
கட்டிய மனைவி கலங்கி நிற்க
தொழிலாளர் வாழ்வும்
இப்படித்தான் போகுதையா!
மாற்றம் ஒன்றே
உண்மை என்றால்!
அது நம் வாழ்வில்
வரத்தான் மறுப்பதேனோ?

- த.சித்திரா

## வாழ்ந்துகாட்டு



சின்னவனே
என்ன சிந்தனை
சமூக சுமைகளால்
சுமூகமற்ற
சூழல் எண்ணியா?
கல்விக் கனதியால்
களைப்புற்றுப் போனாயா?
வறுமை நெருப்பால்
வயிறு எரிகிறதா?
சிக்கல்களோடு
சினேகம்கொள்ளும்
இருப்புக்களோடும்
இருந்துபழகு
வாழ்க்கையோட்டத்தில்
வடம்பிடிக்க
திடம்கொள்
வரட்சிகளோடும்
வாழப்பழகு
நல்வாழ்வுக்காக
கல்வி கல்
அன்புறவோடு
அருகிரு
வாண்மைகளை
வளர்த்துக்கொள்
புன்னகையை தொலைக்காதே
இறப்பு என்பதில்
இருக்கு உண்மைபோல்
வாழ்வும் உண்மைதான்
வாழ்ந்து காட்டி விடு

- மானியூர் ரட்ணேஸ்

## தனியொரு? பல மனிதருக்கு உணவில்லை

தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம். என்று தமிழ்க்கவி பாரதிபாடிய கவிதை வரிகள் அவை:

இன்று உலகத்தில் 300 கோடிமக்களுக்கு மேல் பட்டினியால் வாடுகின்றனர். அப்படி என்றால் ஏன் இந்த உலகம் இன்னும் அழிக்கப் ப டவில்லை. என்று கேள்வி கேட்கத் தோன்றுகிறது.

பாரதி இருந்திருந்தால் இப்போது உள்ள சந்தர்ப்பவாதிகளைப் போல் பாட்டை மாற்றி பாடியிருப்பாரா? அல்லது தான் உண்டு தன பாடுண்டு என்று இருந்திரப்பாரா? ஏதோ பாரதி அன்று பாடியபோது ஏழைமக்கள் பட்டினியால் வாடிய கொடுமையைக்கண்டு அவ்வாறுபாடியிருந்தாலும் ஒருமாற்றம் வேண்டி அல்லது மாற்றம் ஒன்று ஏற்படும் என்றுஎண்ணியே பாடியிருந்தார். ஆனால் பட்டினியால் வாடுவோர் தொகையில் எண்ணிக்கை அளவில் மட்டுமே மாற்றம் ஏற்பட்டுள்ளது என்ற உண்மையை பாரதி அறிந்திருந்தால்...?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உழைப்பே உயர்வுக்கு வழி




வீட்டுக்கு முன்னால் கிளையெறிந்து படர்ந்திருந்த வேப்பமரநிழலில் அமர்ந்து அன்றைய பத்திரிகையை புரட்டிக்கொண்டிருந்தார் தில்லையம்பலம். அவரின் முகம் வழமைக்குமாறாக இறுகிப்போய் இருந்தது. பத்திரிகையில் இருந்த செய்திகள்தான் அதற்கான காரணங்களாய் இருக்கவேணும். வேணுமென்ன அதுவேதான். படுகொலைகள் தலைப்பின் கீழ் வரிசையாய் படுகொலை செய்யப்பட்டோரின் பெயா விபரங்கள் ஒன்றா? இரண்டா? எல்லாம்17ல் இருந்து 40வயதுக்கு உட்பட்டோர். உமது இளந்தலைமுறைகள் எதுவுமே அறியாத அப்பாவிகள் தெருநாய்கள போல தெருவோரங்களில் பிணங்களாய் அப்பப்பா நினைத்தாலே இதயம் நடுங்கிறது. வேலை வெட்டிக்குஎன்று போனதுகள் திரும்பி வரும்வரைக்கும் வீட்டில் உள்ளவைக்கு நடுகம்தான் எத்தனை நாளைக்குத்தான் பயந்து பயந்து வேலைக்குபோகாமல் இருக்கிறது.

இன்னொரு செய்தியின் பக்கம் அவரது கவனம் திரும்பியது. யாழ்.குடாநாட்டில் உணவுத்தட்டுப்பாடு இல்லை பொருட்கள் தாராளமாய் கிடக்கிறது இச்செய்தி படித்ததும் தில்லையம்பலத்தாருக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

போய் சொல்லுவதற்கு அளவேயிலலையா? எப்படி இப்படியெல்லாம் இந்த ஆட்சியில் உள்ளவர்கள் வாய் கூசாமல் பொய் சொல்லமுடிகிறது. அவங்கள் இப்படிசொல்லுறாங்கள் இஞ்சையுள்ளவங்க இருக்கிற பொருளையும் பதுக்கிவைத்துக்கொண்டு கள்ளவிலைக்கு பணக்காரருக்கும் தங்கட சொந்தச் சனங்களுக்கும் விக்கிறாங்க.

தில்லையம்பலமண்ணை பேப்பர் என்ன சொல்லுது?என்றுகேட்டுக்கொண்டு அருகில் வந்து இருந்தார் மயில்வாகனத்தார். பெருமூச்சொன்றை நீளமாய் இழுத்து விட்டுக்கொணடே... என்னத்தைசொல்லுறது மயில்வாகனம் விடியஎழும்பி பேப்பரை படிச்சாலே கவலைதலைக்குஏறிவிடுகிறது. சந்தோசப்படும் படியாக எந்தச்செய்தியும் இல்லை நாளுக்கு நாள் யாழ்ப்பாணத்துச்சனத்தின்ர நிலைமைமோசமகிக்கொண்டே போகிறது. ம்... எங்கபோய்முடியப்போகிறதோ? என தில்லையம்பலத்தார் கவலையாக கூறினார். எங்கபோய் முடியுது அழிவிலதான். பசி பட்டினி ஒருபக்கம் செல்லடி, கிபிரடி மறுபக்கம் சனங்கள் என்ன செய்வது. இஞ்சபார் மயில்வாகனம் யாழ்ப்பாணத்தில் உணவுத்தட்டுப்பாடு இல்லையாம் ஜனாதிபதி சொல்லுறார். என்று பேப்பரில கட்டம் கட்டப்பட்ட செய்தியை மயில் வாகனத்திற்கு காட்டினார் தில்லையம் பலத்தார். என்னண்ணை இவங்கள் முழுப் பூசணிக் காயை சோத்தில மறைக்கிறாங்க. அப்ப அரிசிக்கு அலையிற நாங்கள் விசரரே. நாட்டை ஆளுகிற ஜனாதிபதியே இப்படி புழுகினால் மற்றவையள் என்ன புழுகிவினம். இறைமை பொருந்திய ஒரு நாட்டுத்தலைவராக இருக்கும் ஜனாதிபதியே மக்களின் பசியோடு விளையாடும்போது அயல் நாட்டானுக்கு என்ன கவலை என்று பொரித்தார் மயில்வாகனம்.

இஞ்சைபார் மயில்வாகனம் அவங்களை மட்டும் பிழைசொல்லி சொல்லி என்ன பிரயோசனம் எங்கட யாழ்ப் பாணத்துச்சனங்களையும் சரியான பிழையிருக்கு என்னைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத்தில் என்ன தட்டுப்பாடு வந்தாலும் இந்த உணவுத் தட்டுப்பாடு வராது. எங்கட சனங்களின்ர திமிர்த்தனமும் பணக்காரத்தனமும்தான் முழுக்காரணம் என தில்லையம்பலத்தார் சொல்லும்போது எதோ ஒரு ஏமாற்றத்தின் எதிரொலியால் அவரது மார்பு மேலும் கீழுமாய் ஏறிஇறங்கியது. என்னண்ணை சொல்லிறியள் சனத்தின்ர பணத்துக்கும் அவங்கள் A9 பாதை பூட்டியதற்கும் என்ன சம்பந்தம் என விளங்காது கேட்டார் மயில் வாகனத்தார். பின்ன என்ன வெளிநாடு வெளிநாடு என்ற மோகம் பிடிச்சு அலைஞ்சதால காசு மட்டும் கோடிக்கணக்கிலேயும் மாடிவீடுகளும் மட்டும் தங்களுக்கு காணும் எண்டு நினைச்சதாலேயும் தான் இப்பட்டினிச்சாவை நெருங்கிக்கொண்டடிருக்கிறோம். காசும் வீடும் சோறு போடுமே? என்ற வினாவோடு மயில் வாகனத்தைப்பார்த்தார் தில்லையம்பலத்தார். அட! ஓமண்ணை, குடிசை வீட்டில இருந்தவை கூட மாடிவீட்டுக்குபோனாப்போல திரும்பியும் பார்க்கினம் இல்லை. வெளிநாட்டில் நிற்கிறதுகள் கஸ்ரப்பட்டு உழைச்சு அனுப்ப இஞ்சையுள்ளவை அதை வைச்சுக்கொண்டு பர்றபாடு. தோட்டம் செய்யிறதும் வயல் விதைக்கிறதும் பால்மாடு வளர்க்கிறதும் அவைக்குகேவலமாய் தெரியுது. மயில்வாகனம் அங்கலாய்த்தார்.

**எம்.சந்திரகலா**

என்ன வேலைசெய்தாலும் பசிவந்தால் சோத்தைத்தான் தின்னவேணும். எண்ட நினைப்பு எங்கட சனத்திட்ட கொஞ்சமெண்டாலும் இருந்திருந்தால் ஒருகிலோ அரிசிக்கு வேலையைவிட்டு விட்டு கியூவில நிற்பினமோ? அதுவும் ஒருகிலோ 200 ரூபா வரை போகுது. எரியிற வீட்டில் பிடுங்கியது லாபம் எண்ட கணக்குத்தான் கடைக்காரருக்கு.

அண்ணை 500ரூபா கொடுத்தும் அரிசி வாங்கித்தின்னுவினம் சிலஆக்கள். ஒரு நாளைக்கு 100ரூபா உழைக்கிறதுகள் என்னண்ணை செய்யிறது.

மயில்வாகனம் காசை வைச்சுக்கொண்டு திமிர்த்தனமாய் இருந்தவைக்கு இது ஒருநல்ல பாடம். வயல் விதைத்த எத்தனையோபேர் வயல் விதைக்காமல் விட்டிட்டினம் வயல் காணியள் தரிசாய்க் கிடக்குது. பால்மாட்டை வளர்த்தவை சொல்லினம் உதுகளோட இழுபடஏலாது அதுதான் வித்துப்போட்டம் எண்டு. இப்ப தெரியும் காசு திண்டு பசிமாத்தஏலாது எண்டு.

அண்ணை எங்கட சனங்கள் ரெடிமெற் சாப்பாடுதிண்டு பழகிப்போச்சுதுகள். எல்லாம் வெளிநாட்டுக்காரனின் தயாரிப்புத்தான்.

அவையள் உள்நாட்டான் ஒன்றும் வாங்காயினமாம். அது கசக்குதாம். வெளிநாட்டுக்காரன் உழைச்சுக்கொண்டுபோறான். எங்கட நாட்டான் பார்த்துக்கொண்டிருக்கிறான் எண்டு தில்லையம்பலத்தாரின் வழிக்கே மயில் வாகனத்தார் வந்தார்.

முந்தி எங்கட ஆச்சி அப்புக்கள் பனம் பழம் பொறுக்கிக்கொண்டு வந்து அதில எத்தினை பண்டம் செய்வினம். பனம் புட்டு, பினாட்டு, பனங்காய்ப்பணியாரம் பிறகு பாத்தி போட்டு கிழங்கு கிளறி, ஓடியல் புட்டு எண்டு விதவிதமான சாப்பாடுகள். அதுகளைத் திண்டஉடம்புகள் தான் நோய்நொடியில்லா [illegible] பாணை [illegible] பாதிப்பேர் செத்துப்போயினம். எப்பதான் எங்கட சனம் திருந்தப்போகுதோ என்று ஏக்கப்பெருமூச்சு விட்டார் தில்லையம்பலத்தார்.

திருந்திற சனமெண்டா பஞ்சத்துக்க திருந்தியிருக்கவேணும். பட்டும்பட்டும் புத்திவராத எங்கடசனத்தை என்னண்டு சொல்லுறது. காலங்காலமாய் அன்னியரிட்டை கையேந்தி பழகிப்போச்சுதுகள். இதுகள் திருந்தாதுகள். எண்ட ஏமாற்றமாய் சொன்னார் மயில் வாகனத்தார்.

தோட்டம் செய்யிறநிலபுலங்களை விற்றுப் போட்டு வெளிநாட்டில குடியிருக்கிற சனங்கள் ஒருபக்கம். அந்தநிலங்களில கட்டிடம் கட்டி சீரழிக்கிற யாழ்ப்பாணத்துச்சனங்கள் மறுபக்கம் எண்டா பஞ்சம் வராம என்ன?செய்யும். இது தில்லையம்பலத்தாரின் கவலை.

அண்ணை அதைவிட யாழ்ப்பாணத்தில தோட்டம் செய்யிறவையும் என்ன பயிர் பத்தைசெய்யினம் என்று பாருங்கோ விளைச்சதும் உடனேசந்தைக்கு கொண்டுபோய் காசாக்கிக்கொண்டுவாற பயிர்தான் செய்யினம். கரட்டு, முள்ளங்கி, லீட்ஸ் இதுகள்தான் இன்றைய நாகரீகப்பயிர். முந்தின பயறு, கடலை,சோளம் குரக்கன்,சாமி இதுகளெல்லாம் இப்பத்தஆக்கள் செய்யிறேல அவைக்கு நேரமில்லையாம் தெரியுமே முந்தினஆக்களின்ர வீடுகளில குரக்கன்,சாமி,கடலை,பயறு இதெல்லாம் மூட்டையாக அடுக்கிக்கிடக்கும். எத்தனைமாதம் விடாமல்மழைபெய்தாலும் பஞ்சம் எண்ட ஒண்டு வந்ததே இல்லை. இப்ப ஒருநாள் சாமான் வராட்டியும் பஞ்சம். இதுயாராலவந்தது. இதைத் தெரியாமல் யார் யார் மேலேயோ? பழிபோட்டுக்கதைக்கினம்.

எங்கட இளம்பெடியளுக்கு மண்வெட்டி பிடிச்சு கொத்த வெட்கம். பேனா பிடிச்சு எழுதிற வேலைதான் தேடித்திரியினம். மண்வெட்டிபிடிச்சு கொத்ததெரியுமோ இப்பத்த இளசுகளுக்கு. அவையள் சோவா இருந்து பழகிப்போச்சு. அவையளமட்டும் குறை சொல்லி பிரயோசனம் இல்லை. அவையளின்ர தாய் தகப்பன்மார் சொல்லவேணும். எங்கட அப்பு முந்தி வயலுக்கை வேலை செய்யேக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் இல்லாத நாளில் என்னையும் கூட கூட்டிக்கொண்டு போவார். அவருக்கு ஒத்தாசையாய் அப்பவே நான் கூடமாட வேலை செய்தனனான். பத்துப்பன்னிரண்டு வயசில ஏர் பிடிச்ச கை இது. இண்டைக்கு வரை அதை விடவே இல்லை. உழவரின் வியர்வையில்தான் இன்னும் உலகம் உயிர் வாழுது. இது பலபேருக்கு விளங்கவில்லை. இது தில்லையம்பலத்தாருக்கு வயது 70. இரண்டு மகனும் ஒரு மகளும் அனைவருக்குமே திருமணமாகி ஊரில தோட்டம் செய்யினம். எல்லா வசதியும் பொருந்திய குடும்பத் தலைவன் எண்ட பெருமை மட்டுமல்ல நல்ல உள்ளமும்கொண்ட மனுசன். இரக்ககுணம் கொண்டவர். அவரின் அயராத உழைப்பின் வெற்றிதான் அந்த வாழ்வுக்கு காரணம். பணம் இருக்குதெண்டதுக்காக வீட்டில இருந்து சும்மா பொழுதைக்கழிப்பவர் அல்ல. கொட்டிலுக்க குறைஞ்சது 2 ,3 கறவமாடாவது நிற்கும் எல்லாப்போகமும் தவறாத பயிர் விதைப்பார். இதுசிலருக்கு பொறாமை. பொறாமை மட்டுமல்ல அவருக்கு பணத்தாசை பிடிச்சுவிட்டது என்று கூட சிலர் கதைப்பினம்.

ஏத்தனையோ பேர் அவரிட்டையே நேராக கேட்பினம். ஏனண்ணை உங்களுக்கு என்ன கஸ்ரம் எண்டு. பிள்ளையளையும் முடிச்சுக் கொடுத்துவிட்டு இனியெண்டாலும் ஒய்வாக இருங்ககோவன். ஏன் வெய்யில், மழை எண்டு இப்பவும் அலையிறியள்.இது அவர்களின் கனிவிரக்கமோ இல்லை ஏளனமா வார்தையோ? அதுக்குப்பதிலாய் அவரின் முகத்தில் சிறுபுன்னகை. இதுமட்டுந்தான் வெளிவரும்.

அவர் செய்யும் தொழில் அவருக்கு ஒரு ஆத்ம திருப்தி.உயிர்களுக்கு உணவளிப்பது என்பது சாதாரண விசயமா? எவ்வளவு பெரிய புண்ணிய கருமம். பணம் கொடுத்து வாங்க முடியாத சில விசயங்கள் இந்த உலகத்தில் இன்னும் நிறைய இருக்கு. காசு இருந்தா எல்லாம் இருக்குதெண்டு சில பேர் குதிக்கினம். ஆனால் காசுக்கடங்காத உண்மைகள் இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டுதான் இருக்கு எண்டது அவைக்கு விளங்கேல.

ஏர்புடிச்சு சிவந்து போன அவரது கரங்களும் வெய்யிலின் வெப்பத்தை எதிர்கொண்ட அவரது உடம்பும் மழை ,பனிஎன்ற தயக்கமின்றி நடை போட்ட அவரது கால்களும் கண்களில் தெரியும் கருணைஒளியும் பார்ப்பதற்கே மரியதைக்குரிய ஒரு உழைப்பாளி என்பதை கட்டியம் கூறும்.

பணம் மட்டும் காணுமெண்டுஅவர் நினைச்சிருந்தால் இண்டைக்கு அவரும் ஒருகிலோ அரிசிக்கு வரிசையில் நிண்டிருக்கவேண்டும். இந்தவருசம் மழை பொய்த்துப்போனதால் சிறுபோகம் செய்யமுடியேல. இருந்தாலும் அவருக்கு பஞ்சமில்லை. அவரைப்பார்த்து கேலிபேசியவர்கள் கூட இன்டைக்கு அவரிட்ட வந்து கடன் வாங்கவேண்டிய நிலைமை. விதைப்பதற்கு வைத்திருந்த நெல்லுக்கூட இன்று அந்த ஊரில் பலபேரின் வீட்டில் சோறாகிக்கொண்டிருக்கின்றது.இப்தான் விளங்கியிருக்கும் எல்லாருக்கும் உழைப்பு மட்டுமே

உயர்வானது எண்டு. ஏளனத்துக்கோ? கேலிக்கோ? இதில எந்த இடமும் இல்லை எண்டு. அண்ணை கொஞ்சநாளா றோட்டில நடமாட ஏலாது உந்த A9 பாதை திறந்தவுடன் வாகனத்தின்ர அணிவகுப்புத்தான் றோட்டெல்லாம். மோட்டச் சைக்கிளுகள் தெருவோரங்களில நிப்பாட்டிப்போட்டு எங்கட இளசுகள் பட்டபாடு, ஏதோ எல்லாம் கிடைச்சமாதிரி தங்களவிட்டவன் ஆரண்டு அவையள் செய்த கூத்துக்கள், பேப்பரில்கூட எத்தினைதரம் எழுதிப்போட்டாங்கள் இப்பபார்த்தியளே என்ன நடக்குதெண்டு.

மயில்வாகனம் அதுகளின்ர வயசு அப்படி. வீட்டிலயும் அடங்காதுகள் காவாலியாச் சுத்தித் திரிஞ்சினம். இப்ப தாங்களாக அடங்கி விட்டினம் எங்கட மானம் மரியாதையை நாங்கள் காப்பாத்தவேணும். இது அவைக்கு அப்ப விளங்கேல. இப்ப யாருக்காகவோ மூலைக்குள்ள முடங்கிப்போச்சினம். இனி மேலாவது இதுகளை எண்ணி திருந்தினால் சரி. இல்லையெண்டால் ஆரும்ஒண்டும் செய்யேலாது.

அது சரிதானண்ணை எங்கட சனமும் ஒண்டிலையும் பொறுப்பில்லாமல் இத்தனை காலமும் சீவிச்சுப்போட்டுதுகள்.இனிமேல் எண்டாலும் யோசிக்க வேணும்தானே. இருக்கிற இளம் பெடிபெட்டையளை சின்னஞ்சிறுசுகளை நினைச்சால்தான் கவலையாய் இருக்கு. எங்கட காலம் முடிஞ்சுபோச்சு..ம்.. எண்டு மயிலவாகனம் நீண்டபெருமூச்சொண்டை விட்டார். எங்கட பாட்டன் முப்பாட்டன்காலத்து உழைப்புகள் எல்லாம் வீணாகிக்கொண்டிருக்கு. யாழ்ப்பாணத்தில நட்ட மரந்தடியெல்லாம் தலையிழந்த முண்டமாய் நிற்கிது. பனந்தோப்பு தென்னந்தோப்பு எல்லாம் பாதி தலையில்லாமலும், பாதிபதுங்குகுழிகளுக்கும் எண்டு காணாமல் போய்விட்டது. வெறும் கட்டிடங்கள் மட்டும் இருந்து என்ன பிரியோசனம். இயற்கை வளத்தை பாதுகாப்போம் என்று அரசாங்கம் சொல்லுது. இஞ்சை அவையின்ர ஆசீர்வாதத்தோட இயற்கை அழிப்பு நடக்குது.

போறபோக்கைப் பார்த்தால் யாழ்ப்பாணமும் சகாராப்பலைவனம் போல் ஆகிவிடும் போலகிடக்குது என்று இயற்கைமேல் கொண்ட காதலினால் உருகினார் தில்லையம்பலத்தார். அண்ணை சொன்னதை ஆர்தான் செய்யினம் சொல்லுறத எண்டு செய்யிறத ஒண்டு செய்யிறது இன்னொண்டு. இதுதான் அப்பத்த நாட்டு நடப்பு. ஒஅதுசரிதான் மயில்வாகனம் அதுக்காக அரசியலுக்க எதை எதை சம்பந்தப்படுத்துவது என்றில்லையோ. உந்த மரங்கள் உவைக்கு என்ன செய்தது இனி எந்தக்காலத்திலதான்உப்படியான மரங்களை உண்டாக்குவது.இனி எங்கட சந்ததிதான் உதில கவனம் செலுத்துமோ?இது தில்லையம்பலத்தாரின் ஏக்கம் கலந்த கவலை.

அவருடைய கவலையிலும் நியாயம் உண்டுதானே. இனி வருங்கால சந்ததியினர் இப்படியான காரியங்களில் கவனம் செலுத்துவினமெண்டு என்ன நிச்சயம்? அவர்களை யார்தான் வழிநடத்தப்போயினம்.

அரசியல் லாபங்களுக்காக மக்கள் பகடைக்காய்யாவது ஒன்றும்புதிதல்லவே சரியண்ணை அப்ப நான்போட்டுவாறன். ஓம்... மயில்வாகனம் போய்வாரும் எண்டு அவருக்கு விடைகொடுத்துவிட்டு மீண்டும் பேப்பருக்குள் மூழ்கிப்போனார் தில்லையம்பலத்தார்.

(முற்றும்)

---

# பருநிலை பொருளாதாரத்தில் கிராமிய உற்பத்தித்துறை

இலங்கையின் கிராமிய உற்பத்தித்துறை கிராமிய மக்களின் வாழ்க்கைமட்டத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டிருப்பது யாவரும் அறிந்ததொன்று கிராமிய உற்பத்தித் துறையின் உற்ப்பத்தித்தொழிற்பாடுகள் கிராமிய வளப்பயன்பாட்டை நிர்ணயிப்பனவாய் உள்ளன. கிராமத்தில் நிலமும் மனித உழைபபும் முக்கியவளங்களாய் உள்ளன. இவற்றை முழுமையாக பயன்படுத்தும். வகையில் ஏனையகாரணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

வி.பி.சிவநாதன்
விரிவுரையாளர், பொருளியல்துறை.
யாழ்.பல்கலைக்கழகம்

கிராமிய உற்ப்பத்தித்துறைக்கு தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்வதில் அன்றறை சந்தைஅமைப்பும், சொத்துரிமைகளும் அரசியற்பொருளாதர கொள்கைகளும்,செல்வாக்கு செலுத்துகின்றன. முக்கியமாக சந்தை செயற்ப்பாட்டடை தீர்மானிக்கும் பருநிலைபொருளாதாரக்கொள்கையும் அரசாங்கப்பொருளாதார செயற்பாடும் முக்கியமானவைகள்.கிராமிய உற்பத்தித்துறை பொருளாதாரங்களின் அச்சாணியாக இருந்தபோதும் அதை உச்சமாக பயன்படுத்துவதற்கு தேவையான கீழ்க்கட்டுமானங்கள் போதுமானதாக இருப்பதில்லை உதாரணமாக சந்தை, போக்குவரத்துவசதி, தொலைத் தொடர்புவசதிகள் உழைப்பாளர் ஒய்வு நிலையம், வைத்திய சாலைகள், கல்விக்கூடங்கள், ஆய்வுகூடங்கள், தேவைக்ஏற்ப இருப்பதில்லை. இவற்றினை தேவைகளாகவும் அபிவிருத்தி நோக்கிலும் ஏற்படுத்திக்கொடுத்தல் என்பதே பருநிலைக்கொள்கையின் பரவலாக்கப்பட்ட அமுலாக்கமாக இருத்தல்வேண்டும். எந்த ஒரு நாட்டிலும் பருநிலைப்பொருளா தாரக்கொள்கை ஒரு பிரதேசத்தை புறந்தள் ளியதாக இருக்கக் கூடாது.அவ்வாறு இருப்பின் அது நல்லரசாட்சிகான (Good governance) பண்புகொண்ட அரசாங்கமாக இருக்கவில்லை என்பதே கருத்தாகும்.

மேற்குறிப்பிட்ட பொருளாதாரத் தத்துவங்களை கவனத்தில் கொண்டுநோக்கும்போது இலங்கையில் கிராமியதுறை சார்பான பருநிலை பொருளாதாரத்துக்கொள்கை (Good governance) நல்லரசாட்சிக்கு எடுத்தக்காட்டாக இருக்கவில்லை இதுவே அந்த வறுமை குடிகொள்ளக்காரணமாய் இருக்கின்றது.

கிராமியம் என்றால் வறுமை என்றும் வறுமை என்றால் கிராமத்திற்கே உரித்தானது என்ற தோற்றப்பாடு பருநிலைக்கொள்கை அமுலாக்கலில் ஏற்பட்ட வினைத்திறன் இன்மையையே காட்டுகின்றன. கிராமிய பொருளாதாரங்கள்புறந்தள்ளப்படுவத என்பதை வடபகுதி கிராமங்களில் உழைப்பாளர்கள் படும்துன்பங்களில் இருந்து அறியமுடிகிறது.கிராமிய தொழிலாளர் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டவர்கள் சிறுவிவசாயிகளாவும் விவசாயக்கூலிகளாகவும் அவர்கள் இருப்பதை யாவரும் அறிவர் அவர்களின் உழைப்பின் மிகையே நகர வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது என்பது கோட்பாடு இருப்பினும் A9பாதை பூட்டப்பட்டதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கிராமிய மக்களே அவர்கள் உற்த்தியை சந்தைப்படுத்தமுடியவில்லை.விவசாய உற்பதிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்ததால் விவசாய உற்ப்பத்தியளர் வருமானம் வீழ்ச்சியடைந்தது. அதனால், கிராமிய உழைப்பாளர்களின் தேவை குறைந்தது அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை உழைக்க கூடியவர்களும் தொழில் இல்லாததால் வேலை இல்லாமல் இருக்கிறர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களாகப் பாருங்கள்

இன்றைய மொட்டுக்கள் நாளைய அழகிய பூக்கள். அழகிய பூக்களை அழகாகப் பார்ப்பது அனைவரினதும் கடமையும் பொறுப்பும் ஆகும். சிறுவர்கள் என்போர் 18வயதிற்குட்பட்டவர்கள். எனினும் உள ரீதியிலும் உடல் ரீதியிலும் சில பெரியவர்கள் சிறுவர்களாகின்றனர். பெரியவர்கள் என்று கூறும் வயதுடையவர்களாயினும் உளவியல் ரீதியாக பெரியவர்கள் என்ற நிலையை அடையாத பெரியவர்களையும் சிறுவர்கள் என்கிறோம்.

சிறுவர்களுக்கான பலவித உரிமைகளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பட்டயமாகக் குறிபபிடினும் சிறுவர்களுக்கான கடமைகளும் இணைந்தே காணப்படவேண்டும். இன்றைய சிறுவர்களை எதிர்கால தலைவர்களாக உருவாக்குவதில் சிறுவர்களுக்குரிய உரிமைகளும் சலுகைகளும் கைகொடுக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை. சிறுவர்களுடைய உரிமைகளை மரணமாக்கும் கடப்பாடுடையவர்களாக தனிநபர், பெற்றோர், சமூகம் குடிமக்கள் அரசாங்கம் போன்றோரை குறிப்பிடலாம். பிள்ளைகளில் மறைந்திருக்கும் பல விடயங்களை எவ்வாறு வெளிக்கொணர்வது என்பது பற்றி பல்வேறு தரத்தில் இருந்து நாம் நோக்கவேண்டும்.

சிறுவர்களுக்கு சிறப்பானதும் வேண்டப்படுவதுமான உரிமைகளை நாம் நாலாக வகைப்படுத்த முடியும்.

- சிறுவர்களுக்கானஉயிர்வாழ்தல் உரிமை
- பங்குபற்றும் சுதந்திரம்
- பாதுகாப்புப்பெறும் உரிமை
- மேம்பாடு அடையும் உரிமை

என்பவற்றை கூறலாம். ஒருசிறுவன் அல்லது சிறுமி மேற்படி விடையங்களில் திருப்திப்படுதல் அவர்களுக்கான உரிமைகள் அனைத்தும் கிடைக்கப்பெற்றவர்கள் ஆகின்றனர்.

இன்றைய சிறுவர்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்கிய வண்ணமே உள்ளனர். தமது பிரச்சனைகளை தீர்ப்பவர் யார் எனத் தெரியாமல் தமது மனத்தினுள்ளே போட்டு குழம்புகின்றனர். இன்றைய அரசியல் கட்டமைப்பில் சிறுவர்களின் நலனே முக்கியப்படுத்தப்படுகிறது. நீதிமன்ற விசாரனைகள் கூட சிறுவர்நலன் கருதியே சிறுவர் பக்கம் நின்றே நோக்கப்படுகிறது. இது சிறுவர்களுக்கு கிடைத்த பெரிய பாதை. இது இவர்களின் முன்னேற்றப்பாதையுமாகும். இதை அறியாத சிறுவர்களும் உள்ளனர். பெரியவர்களும் உள்ளனர்.

சிறுவர்களின் முக்கிய பிரச்சனைகளாக நாம் இன்றைய எமது காலச் சூழலோடு பார்க்க வேண்டியவையாக

1. சிறுவர்தொழிலுக்கு அமர்த்தப்படுதல். (14வயதின் கீழ்).
2. பாடசாலை இடைவிலகல் (14வயதின் கீழ்).
3. இளவயது கருத்தரிப்பு (18வயதின் கீழ்)
4. பெற்றோர் அக்கறையின்மை மற்றும் பிள்ளைகளை உதாசீனம் செய்தல்.
5. பிள்ளைகளை பிழையான செயல்களுக்கு பயன்படுத்தல். (மதுபானம் விற்றல், மதுபானம் கொண்டு செல்லல்)

கிராமப்புறங்களிலேயே மேற்படி பிரச்சனை காணப்படுகிறது என்பது ஆய்வு முடிவுகள். அதிலும் வறிய குடும்ப சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது வெளித்தெரிகிற விடயம்.

இதற்கான காரணமமாக குறிப்படக்கூடியது கல்வியறிவு குறைந்த சமூகம்,வறுமை மனநிலையில் மாற்றத்தை விரும்பாத மக்கள் என சொல்லிக்கொண்டே போகலாம்.

மேற்படி மக்கள் சிறுவர்களை சிறுவர்களாகப் பார்ப்பது அருகியே காணப்படுகிறது. சிறுவர்களை சிறுவர்களாகப் பார்க்க ஒவ்வொரு தனிநபரும் தயாராகவேண்டும். அவர்கள் முன்னேற்றமடைய தேவையான வழிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். இவற்றை செய்யாது விடுதல் என்பது துஸ்பிரயோகம் என்ற வகைப்பாட்டிற்குள் உட்படுகிறது.

பெற்றோர் பிள்ளைகளிடம் இருந்து அறியப்பட வேண்டியது நிறையவே உண்டு. ஒரு பிள்ளையை ஒரு உயிர் என்றுமட்டும் நோக்கும் பெற்றோர்களும் உண்டு அந்த உயிரினுள்ளும் பலம் என்பதும் பலவீனம் என்பதும் உண்டு. அதைக்கண்டுபிடித்து முன்னேற்றத் தவறுகின்றனர். ஒரு பிள்ளையின் பலம் எத்துறைசார்ந்தது என்றறிந்து அந்த ஆர்வத்தை வளர்க்கமுயல வேண்டும். பலவீனத்தை கண்டுபிடித்து அதிலிருந்து விடுபட வழிசெய்ய வேண்டும். ஒரு குழந்தையை திறம்பட உருவாக்குவதில் முற்றுமுழுதாக மரபுவழி செல்வாக்கு செலுத்துவதில்லை ஒரு பிள்ளையை முன்னேற்ற பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. என்பதை உணர்ந்து, தெளிந்து சிறுவர்களை சிறுவர்களாக நோக்குங்கள்.

**சந்திரா நக்கீரன்**
**சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்**
**பிரதேச செயலகம், உடுவில்.**

# கஞ்சி கஞ்சி என்றால் பானை நிறையாது

## சிந்தித்து முன்னேறவேண்டும்

பட்டிக்காட்டான்

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மூலம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த சமாதானத்தின் பின் மூன்று தசாப்தங்களாக நிலவிவந்த யுத்த நெருக்கடியும் அதனுடன் கூடிய பொருளாதார நெருக்கடியும் நீங்கி தொழில் வாய்ப்பு அதிகரித்து பொருளாதாரத்தில் பாரிய மறுமலர்ச்சி ஏற்பட்டதுபோல் இருந்தது.

இந்த மாற்றம் உழைக்கும் கூலிவறிய விவசாய மக்களுக்கு பாரிய திருப்பு முனையாக அமைந்தது. எந்தக் காலகட்டத்திலும் அன்றாட உழைப்பை நம்பி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் உழைப்பாளருக்கு அரசியல் காரணங்கள் அதுசார்ந்த நடைமுறைகளுக்கு அப்பால் இந்த இடைக்காலம் ஒரு பொற்காலமாக இருந்தது போல் ஒரு மாயத்தோற்றத்தை கொண்டிருந்தாலும் இந்த பொற்காலம் விரைவில் இடர் காலமாக வரும் என்பதை முற்கூட்டியே உணர்ந்து கொள்ள அவர்கள் ஒன்றும் அரசியலில் தீர்க்கதரிசனம் பெற்றிருக்கவில்லை.

இருந்தபோதிலும் தமது அன்றாட வாழ்க்கையை சந்தோசமாக ஓட்டிக்கொண்டிருந்தனர். அவர்களால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடர்களை கஸ்டங்களை புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப வாழ்க்கையை செப்பனிடத் தெரிந்திருக்கவில்லை செப்பனிடக்கூடிய பொருளாதாரத்தை கொண்டிருக்கவுமில்லை.

இருந்தும் வறிய கூலி மக்களாலும் வறிய விவசாய மக்களாலும் சிறுகச் சிறுகச் சேமித்ததை வைத்துக்கொண்டதை வைத்து தேடிய சிறு சிறு பொருட்களையோ அல்லது வீட்டில் வளர்த்த ஒரு சில கால்நடைகளையோ இடாகால நேரத்தில் குறைந்த விலைக்கு விற்கப்பட்டு அன்றாட உணவுத்தேவையை சிறு அளவில் மட்டுமே சமாளிக்கமுடிந்தது.

2006 ஆகஸ்ட் 11 பின் ஏற்பட்ட இடர் காலத்தின்போது அரிசி 300 ரூபா வரை விற்றது. இவர்களின் கையில மடியில் இருந்ததெல்லாம் அப்போதே விற்றுத்தீர்ந்துவிட்டது. இப்போது அவசரத்தேவைக்கு விற்பதற்கு ஏதுமில்லாத நிலையில் எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் சொல்லொணத் துன்பங்களை நாளும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள் நாளொரு விலை பொழுதொரு விலையாக அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக அரிசியின் விலையேற்றம் வறிய மக்களை மேலும் நெருக்கடிக்குள் கொண்டு செல்வதற்கு ஏதுவாக உள்ளது. இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சமுர்த்தி நிவாரணம் இப்போது ஏற்பட்டுள்ள விலை விகிதாசாரத்திற்கமைய அளவீடுகள் குறைந்துவிட்டது. அதேவேளை, சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் தாமதங்கள் நடைமுறைசிக்கல்கள், முறைகேடுகள் என்று நிறையவே காணப்படுகின்றது. இவை எல்லாம் வறிய மக்களை மேலும் மேலும் துன்பமான வாழ்வியல் பாதைக்கு இட்டுச்செல்கின்றது. வறிய மக்களின் வறுமையை ஒழிக்க வந்த சமுர்த்தித்திட்டமும் தோல்வி கண்டு விட்டதுபோல் தெரிகிறது.

ஏழைக் குடும்பங்களில் உள்ள கற்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள் போசாக்கின்மையினால் உடல்உள ரீதியான பாதிப்புக்கு ஏற்கனவே உள்ளாகி இருக்கின்றனர். கணவனை இழந்த தாய்மார்கள் போதிய வருமானம் இல்லாமையினால் குடும்பக் கஸ்டங்களை சுமக்க முடியாத பரிதாபநிலையில் காணப்படுகின்றனர். இந்தநிலையில் யுத்தம் மிகவும் தீவிரம் அடைய அடைய விலைவாசி அதிகரிக்கும். இது வறியமக்களை பாதிக்கச்செய்வதுடன் நாட்டில் களவு, கொள்ளை, மோசடி, கலாச்சாரச்சீர்கேடுகள் மேலும் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டாகும் இக்காலகட்டத்தில் ஊழல் மோசடிக்காரர்கள் அதிகாரம்படைத்தவர்களே வாழமுடியும். நலிவுற்றோர் மேலும் மேலும் வறுமைக்குச்சொந்தக்காரர்களாகவே இருக்க வேண்டிய நிலை ஏற்படும். இன்று அபிவிருத்திபற்றி பேசுவோர் அபிவிருத்தி இங்கு நடைபெறுகின்றது என்று சொல்லுவோர் வறிய மக்களின் உண்மை நிலை இப்படித்தான் இன் னும் இருக்கின்றது என்ற உண்மையை சொல்லுவார்களா? என்றால் இல்லை என்றே துணிந்து சொல்லமுடியும். இவர்களுக்கு அபிவிருத்தி என்றால் என்ன என்ற வரைவிலக்கணம் தெரிந்திருந்தால் சாதாரண ஏழை மக்களின் உணர்வும், பசியும்தான் முதலில் தெரிந்திருக்கவேண்டும். இந்தவகை யில் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆகவே, எமது எதிர்கால மாற்றத்தைப் பற்றி நாமே சிந்திக்க வேண்டியவர்களாகவே உள்ளோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தேசியம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்

சர்வதேச ரீதியாக இன்று தேசிய இனங்கள் தங்கள் இருப்பு தொடர்பாக தீவிரமாக செயற்பட முற்படுகின்றன. உலக மயமாதல் (Globalization) செயற்பாடுகள் தேசிய இனங்களின் இருப்பு தொடர்பில் பல்வேறு வழிகளிலும் தாக்கத்தை செலுத்துகின்றன. இந்நிலையில்,தனக்கே உரிய மொழி, பிரதேசம்,பொருளாதாரம்,கலாசாரம் என்பவற்றை கொண்ட மலையகத் தமிழர் தங்கள் தனித்துவமான இருப்பு தொடர்பில் கவனஞ் செலுத்த முற்பட்டிருப்பது அந்த மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக் கூடிய விழிப்புணர்வின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். ஆனால், மறுபுறத்தில் மலையகத் தமிழரின் இருப்பை சிதைப்பதற்கான முயற்சிகள் பல்வேறு மட்டங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறாக அரசாங்க மட்டத்திலும், தனிப்பட்ட ரீதியிலும் மலையகத் தமிழரின் இருப்பை சிதைப்பதற்கு திட்டமிட்ட முறையில் பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் நகர்த்தப்படுகின்றன. குறிப்பாக சில முக்கிய விடயங்களை பார்ப்போமானால்,

(1) இருப்பை பாதுகாப்பதற்கு மிகவும் முக்கிய தேவையாக விளங்குவது தொடர்ச்சியான நிலப்பரப்பு. ஆனால் மலையக மக்களின் நிலம இன்று பல்வேறு வழிகளில் திட்டமிட்ட பறிக்கப்படுவதை காணலாம். நுவரெலியா, பதுளை, கண்டி,இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, களுத்துறை, மொனறா கலை மாவட்டங்களில் மலையகத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்கள் திட்ட மிட்டகுடியேற்றங்கள், கிராமய மாக்குதல், அபிவிருத்தித் திட்டங்கள், சட்ட விரோத ஆக்கிரமிப்பு என பல்வேறு வழிகளிலும் துண்டாடப்படுகின்றது

**காத்தமுத்து**

(2) நிலத்தை போன்று பொருளாதாரம் தேசிய இனங்களின் இருப்பு தொடர்பில் முக்கிய பங்கு வகிப்பதை அவதானிக்கலாம்.மலையகத் தமிழரின் பொருளாதாரத்தில் பெருந்தோட்டம் பயிர்செய்கை, சிறு விவசாயமும் கால்நடை வளர்ப்பும்,சிறு வியாபாரம் மற்றும் இரத்தினக் கல் வியாபாரம் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன.

இவற்றில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை (தேயிலை, இறப்பர்) முதன்மையாக விளங்குகின்றது. இன்று இந்த பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையானது சிதைப்பு மற்றும் பொருளாதாரத்தை பிடுங்கல் என இரு வழிகளில் மலையகத் தமிழரிடத்திலிருந்து கைமாற்றப்படுகின்றது. சிதைப்பு எனும் பொழுது குடியேற்றம், பராமரிப்பின்மை, நகரமயமாக்குதல், காடு வளர்ப்பு, மீள் நடுகை இல்லாமை, வளங்களை சூறையாடல் (மரம் வெட்டுதல், கற்களை விற்றல்) தோட்டங்களை குத்தகைக்குவிடல் என பல்வேறு வழி முறைகளினூடாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை சிதைவுக்குட்படுத்தப்பட்டுள்ளது.சிறு தோட்டங்களை (50 ஏக்கருக்கு உட்பட்ட) பெருமளவில் ஊக்குவிப்பதனூடாக (இன்று மொத்த தேயிலை ஏற்றுமதியில் 52% சிறு தோட்ட உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையானது மலையகத் தமிழரிடத்திலிருந்து பிடுங்கப்படுகின்றது. சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் (Tea Small holders) 90% மேல் சிங்களவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(3) மலையகத் தமிழரின் இருப்பை பாதிக்கின்ற மற்றுமொரு அம்சம் கல்வி ஆகும். மலையகத்திற்கென தனியான பல்கலைக் கழகமொன்று இன்று வரையில் இல்லை. மலையகத் தமிழருக்கென நிர்மாணிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி கலாசாலையான ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் இன்று 25% பெரும்பான்மை இனத்தவருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மலையகப் பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறை மற்றும் அதிகூடிய மாணவர் இடை விலகலும் மலையகத் தமிழரின் கல்வி துறையில் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றன.

(4) மற்றுமொரு பிரதான விடயம் மொழி அமுலாக்கம். தமிழ் மொழி அமுலாக்கம் குறைந்து இன்று நுவரெலியா மாவட்ட நுவரெலியா,அம்பகமுவ பிரதேச சபைகளுக்குட்பட்ட பிரதேசங்களில் கூட முறையாக அமுல்ப்படுத்தப்படவில்லை.

(5) மலையகத் தமிழரின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் முக்கியமானதொரு விடயமாக இன்று உருவெடுத்திருப்பது திட்டமிட்ட முறையில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டாய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம். பெண்களுக்கு மட்டுமின்றி ஆண்களுக்கும் திட்டமிட்ட முறையில் மிகவும் சூசகமாக நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் விளைவாக மத்திய மாகாணத்தில் பல பாடசாலைகளை மூடிவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதேவேளை, மலையகத் தமிழர் செறிவாக வாழும் சில பிரதேசங்களில் முதலாம் தரத்திற்கு சேர்ப்பதற்கு இன்று ஒரு மாணவர் கூட இல்லாதிருப்பது இத்திட்டம் மலையகத் தமிழரின் இருப்பில் எத்தகைய தாக்கத்தை செலுத்தியுள்ளது. என்பது புலனாகின்றது

(6) இன்றையப் போர்ச் சூழலின் விளைவுகளும் மலையகத் தமிழரை வெகுவாக பாதித்துள்ளது. இம் மக்கள் தமிழர் என்பதால் இன ரீதியான ஒடுக்கு முறைக்கும், தொழிலாளர்கள் என்பதால் வர்க்க ரீதியான ஒடுக்கு முறைககும் முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.இவ்வாறான ஒடுக்கு முறைகளுக்கும்,எதிர்கால இருப்பு தொடர்பில் பல்வேறு சவால்களுக்கும் முகங் கொடுத்துள்ள நிலையில் தான் மலையகத் தமிழரின் அரசியல் இலக்கு என்னவாக இருக்க வேண்டுமென்ற வினா மேலெழுகிறது. இன்றைய இன மற்றும் வர்க்க ரீதியான ஒடுக்கு முறைகளுக்கெதிராக போராடுவதற்கு அதிகாரத்தை கைப்பற்றல் இன்றியமையாத அம்சமாக விளங்குகிறது. தங்கள் கையில் அதிகாரங்கள் இன்றி இப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

மலையகத்தின் புவியியல் காரணமாக தனிநாட்டு கோரிக்கை சாத்தியமற்றது. எனவே,இலங்கையின் அரசியலமைப்புக்குள் மலையக மக்களுக்கான அதிகார பங்கீடு ஏற்படுத்தப்பட வேண்டும். மலையகத் தமிழருக்கான அதிகார அலகு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இந்நிலையில் அந்த அதிகார அலகு எது என்ற வினா எழுகிறது.மலையக மக்களுக்கான அதிகார அலகு பற்றி சிந்திக்கும்போது நிலத் தொடர்ச்சியை ஒரு பிரச்சினையாகக் கொள்ள தேவையில்லை. நுவரெலியா மாவட்டத்தை முதன்மையாக கொண்டு ஏனைய மாவட்டங்களில் மலையகத் தமிழர் செறிவாக வாழும் இடங்களை உள்ள டக்கிய பிரதேசத்தை கொண்ட ஒரு அதிகார அலகு உருவாக்கப்பட வேண்டும்

இன ஒடுக்குமுறை அரசாங்கங் களிடம் எந்தவொரு தேசிய இனமும் தங்களை ஆளும அதிகாரத்தை கொடுக்க முடியாது. சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்கக் கூடிய அரசியல் அதிகாரம் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் வழங்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் மலையக மக்களுக்கும்,சமஷ்டி கோட்பாட்டுக்கு இணங்க கூடும்,பகிர்வும் தத்துவத்தை பயன்படுத்தி அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.அதேவேளை, அதிகாரங்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். மத்திய அரசில் மலையக மக்களுக்கான பங்கீடும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் மேற்குறித்த இலக்கை நோக்கி மலையக அரசியல் நகர்கிறதா? என்றால், இல்லை என்றே கூறவேண்டும். இன்றைய மலையக அரசியல் சக்திகளுக்கு இந்த இலக்கு பற்றிய தெளிவான கருத்து இல்லை. இன்னும் 'இந்திய வம்சாவழித் தமிழர்' என்ற மனோபாவத்திலிருந்து மாறவில்லை. இந்தியாவுடன் இணைத்து பார்க்கக் கூடிய இந்த மனோபாவமானது ஒரு அந்திய நிலையை மலையக மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. மலையகம் இவர்களது வாழ்வாதாரப் பிரதேசம் என்பதால் 'மலையகத் தமிழர்' என்ற பதமே பொருத்தமானது. மலையக அரசியல் தலைமைகளிடத்தில் அரசியல் இலக்கு பற்றிய தெளிவின்மை போன்றே செயற்பாடுகளிலும் தெளிவில்லை.எந்தவொரு மக்கள் கூட்டத்தினுடைய அரசியல் கட்டம் கட்டமாகத்தான் வளர்வது வழக்கம். இதற்கு அம்மக்கள் கூட்டத்தினுடைய அனுபவமே காரணம். முதற் கட்டத்தில் அதிகாரத்திலுள்ள அரசாங்கங்களுடன் இணைந்து உரிமை, தேவைகளை பூர்த்திச் செய்ய முயற்சித்தல். இரண்டாவது கட்டத்தில் ஒரு எதிர்க்கட்சி அரசியல் நடத்தும் கட்டம்.இதன் சாதகமான அம்சம், இந்த அரசியலை செய்ய வேண்டுமென்பதற்காக மக்களின் பிரச்சினைகள் பேசு பொருளாக்கப்படும். முதல் இரண்டு கட்டங்களும் பெரும்பாலும் பாராளுமன்ற அரசியலினூடாகவே கொண்டு நகர்த்தப்படும். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கக்கூடிய எந்தவொரு மலையக அரசியல் கட்சியும் இந்த இரண்டாவது கட்டத்தை செய்ய தயாரற்ற நிலையிலிருப்பதால் மலையக மக்களின் பிரச்சினைகளை பேசு பொருளாக்குவது மிகவும் கடினமான விடயமாக மாறியுள்ளது. மூன்றாவது கட்டம் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போராட்டம். மலையக அரசியல்வாதிகள் விலைபோகும் கூட்டமாக இன்னும் முதற் கட்டத்தையே நகர்த்த முடியாத துர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கிய நிலையானது,அரசியல் இலக்கு பற்றி இன்னும் அவர்கள் தெளி வடையவில்லை என்பதையே உணர்த்து கிறது. இதனால், இன்று மலையக அரசியல் ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது.

இந்நிலையிலேயே மலையக அரசியல் இந்த தேக்க நிலையிலிருந்து மீள்வது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்கு முதற்படியாக மலையக தேசிய அரசியலை உருவாக்குதல்வேண்டும். மலையக மக்களுடைய அபிலாஷைகளின் திரட்டான'மலையக தேசியம்' உருவெடுக்கவேண்டும். இதற்காக மலையகத் தமிழரின் அபிலாஷைகளை ஒன்று திரட்டி முன்வைக்கவேண்டும். மலையக தேசிய அரசியலானது,மலையகமக்களின் ஒடுக்கு முறை வரலாறு. உள்ளடக்கியதாக அமைதல்வேண்டும். இதன் அடுத்த கட்டமாக மலையக அரசியலை மையப்படுத்தியதாக மக்களை அமைப்பாக்குதல் வேண்டும்மக்களை அமைப் பாக்கியதன் பின்னர் சேமிப்பு சக்திகளை அணித் திரட்டுதல் முக்கியமாகும். இதில் பிரதானமாக மலையகத்தி ற்கு வெளியில் வாழும் தமிழர்கள், தமிழகம் மற்றும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் ஆகியோருடன் துணை சக்திகளான முற்போக்கு சிங்கள மக்கள், இந்தியாவின் முற்போக்கு சக்திகள், மற்றும் உலகெங்குமுள்ள தேசியவிடுதலை போராட்ட சக்திகள் என பலவும் அடங்கும்.

முதல் கட்டத்தை செய்தால் தான் அடுத்த கட்டங்களை பற்றிசிந்திக்கலாம்.ஆனாலும், கவலைகளுக்கு மத்தியிலும் சில நம்பிக்கை ஒளி கீற்றுக்கள் தென் படுவதை காணலாம். குறிப்பாக புதிய தலைமுறை,உலக அனுபவங்களை வைத்து கொண்டு புதிதாக சிந்திக்க தலைப் பட்டுள்ளனர்.பிந்தனுவெவ சம்பவத்திற்கு எதிரான போராட்டம், மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான போராட்டம், சம்பள உயர்வு போராட்டம் என்பவற்றின் போது மிகவும் தீவிரமாக வெளிப்பட்டதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

மலையக அரசியல் தேக்க நிலையிலிருந்து மீள்வது பற்றிய வழி முறைகள் பற்றி சிந்திக்கின்ற போது,மலையக தேசிய அரசியலை முன்னெடுப் பதில் உள்ள தடைக்கற்கள் பற்றியும் கவனத்தை செலுத்துவது இன்றியமையாததாகும்.

பிரதான தடை காரணியாக விளங்குவது மலையக தொழிற்சங்க அரசியல். மலையகத்தில் செயற்படக்கூடிய அனைத்து தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளும் மலையக இன அரசியலை நோக்கிய நகர்விற்கு தடையாகவுள்ளது.1989இல் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தோற்றம் மலையக தேசிய அரசியலை நோக்கி யதாகவிருந்த போதும் பின்னாளில், குறிப்பாக இன்றைய கட்டத்தில் மலையக மக்கள் முன்னணியே பிரதான நேர் எதிர் சக்திகளில் ஒன்றாக விளங்குவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்

மேலும் தொழிற்சங்க அரசியலானது தோட்டங்கள் கிராமங்களாவதை விட தோட்டங்களாகவே இருப்பதை ஊக்குவிக்கின்றது. இதன் காரணமாக மத்தியத்தர வர்க்கம் மீள தோட்டங் களுக்கு வர முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனை விட பொருளாதார தேவை கருதி பெரும் எண்ணிக்கையானோரின் கொழும்பை நோக்கிய நகர்வும் அதிகரித்துள்ளது. அடுத்ததாக மலையகத்தில் அனைத்து தளங்களிலும் இயங்கக்கூடிய சாதிய கட்டமைப்பு,அரசியல் மலையக தேசிய அரசியலை நோக்கிய பயணத்தில் மற்றுமொரு தடைக்கல்லாகும். மலையகத்தில் போராட்ட உணர்வை சிதைக்கும் நோக்குடன் ஊடுரு விலுள்ள பெரும் எண்ணிக் கையிலான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் மலையக தேசிய அரசியலுக்கு இருக்கக் கூடிய மற்றுமொரு தடைக் காரணியாகும்.

மலையகத்தில் இருக்கக் கூடிய முன்னேறிய மக்கள் பிரிவினரின் தேவைக்கதிகமான அச்சவுணர்வு பல்வேறு வழிகளிலும் மலையக தேசிய அரசியலுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.அத்துடன் இன்னும் இம்மக்களின் குறிப்பிடத்தக்க பிரிவினரிடையே நிலவுகின்ற இந்தியர் என்ற உணர்விலிருந்து விடுபடமுடியாமை. இந்தியாவும் திட்டமிட்ட முறையில் பல்வேறு வழிகளில் இதனை ஊக்குவிக்கின்றது.இதன் நவீன வெளிப்பாடுதான் உலகெங்கிலும் பரந்து வாழும் இந்திய வம்சாவழியினரை இணைக்கும் 'கோபியோ' (Global Organization of persons of Indian Origin) அமைப்பின் செயற்பாடு விரிவுத் தன்மையை குறிப்பிடலாம்.இதன் நடப்பு ஆண்டுக்கான தலைவராக இந்திய விஸ்த்தரிப்பு வாதத்தின் நலன் விரும்பியான பி.பி.தேவராஜ் நியமிக்கப்பட்டிருப்பதுடன் இவ்வமைப்பின் செயற்பாடுகளை இலங்கையில் முன்னெடுப்பதில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரன் தீவிரமாக செயற்பட்டு கொண்டிருக்கிறார்.

இதே போன்று பல்வேறு மட்டங்களிலும் இடம் பெறக்கூடிய இந்திய ஊடுருவல். வரலாற்று ரீதியாக பல ஒப்பந்தங்களை இலங்கை அரசாங்கத்துடன் செய்து மலையகத் தமிழரின் அரசியல் பலத்தை குறைப்பதில் இந்தியா கவனஞ் செலுத்தியது. சுதந்திர இலங்கையின் மொத்த சனத் தொகையில் 13% மாக இலங்கையின் இரண்டாவது தேசிய இனமாக இருந்த மலையகத் தமிழர் இன்று 6% த்துடன் நான்காவது இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளனர்.

மேலும்,இன்று மலையகத்தில் ஊடுருவி இருக்கக் கூடிய மாற்று தெய்வ வழிபாட்டு முறைகள் மலையக தேசிய அரசியலில் வளர்ச்சியை தடுப்பதில் குறிப்பிடத் தக்க பங்கினை செலுத்தி வருகின்றது. இதன் ஊக்குவிப்பில் இந்தியாவின் மறைமுக வகிபாகத்தை குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல! குறிப்பாக சாயிபாபா, அம்மா பகவான், ஐயப்பன், ஆஞ்சநேயர், வழிபாட்டு முறைகளின் செயற்பாடுகளை அவதானிக்க வேண்டியுள்ளது. இவ்வழிபாட்டு முறைகள் மலையக பண்பாட்டு இன அடையாளங்களின் தனித்துவம், மொழி என்பவற்றில் நேர் எதிரான தாக்கத்தை ஏற்படுத்தி வருவதுடன், மலையக தேசிய அரசியல் கருத்தியலை சிதைப்பதில் பெரும் பங்களிப்பு செய்கின்றன. இந் நிலையிலேயே, மலையகத் தமிழரின் இருப்பு மற்றும் மலையக தேசியம் பற்றிய கருத்தியல் என்பவற்றை பாதுகாத்து முன்னெடுப்பது தீவிரமாக சிந்திக்க வேண்டியுள்ளது. பிரதானமாக அனைத்து மலையக தமிழர்களினதும் கடமை மற்றும் பொறுப்பின் வகி பாகம் பெருமளவில் தேவைப்படும் காலம் இதுவாகும். அதேபோன்று புலம்பெயர்ந்த தமிழர்களின் பொறுப்பும், கடமையும் மிகவும் வேண்டப்படும் காலமும் இதுவே ஆகும். புலம் பெயர்ந்த தமிழர்களிடம் இருக்க கூடிய வளங்கள், உலகளவில் மலையகத் தமிழரின் பிரச்சினையை பேசு பொருளாக்க உதவவேண்டும். சர்வதேச ரீதியில் இயங்கக் கூடிய வளங்கள், உலகளவில் மலையகத் தமிழரின் பிரச்சினையை பேசு பொருளாக்க உதவவேண்டும். சர்வதேச ரீதியில் இயங்கக் கூடிய தொடர் பூடகங்களின் பங்களிப்பின் போதாமை இவ்விடயத்தில் நிவர்த்திச் செய்யப்பட வேண்டும்.

'மலையகத் தேசியம் கருத்தியல் முன்னெடுக் கப்படாதவிடத்து, மலையகத் தமிழரின் எதிர்கால இருப்பு என்பது நிச்சய மற்றதாகவே தெரிகிறது!

---

## கிராமிய உழைக்கும் வறிய மக்களுக்காக 2005- மே 2008 வரைக்கும் கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதாபிமான செயற்திட்டங்கள்

01. முதற்கட்டமாக 10கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டது. அக்கிராமங்களில் முதல் 10அங்கத்தவர்கள் தெரிவுசெய்து 5000ரூபா வட்டி இல்லக்கடன் வழங்கப்பட்டது. பின்பு அக்கடன் சுழற்சிமுறையில் வழங்கப்பட்டு வருவதுடன் அக் கடனை கட்டிமுடித்த அங்கத்தவருக்கு இரண்டாம் சுற்றுக் கடனாக 10000ரூபா வழங்குவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. பின் நாட்டில் ஏற்ப்பட்டஅசாதாரண சூழ்நிலை காரணமாக நிதிநிலையில் ஏற்பட்டநெருக்கடியினால் 7000 ரூபாகடனாக மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுவருகின்றது.

02. அடுத்து சுகயினமாக இருக்கும்ஒரு அங்கத்தவருக்குஅவரது குடும்பத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு 3000ரூபா சுகயீனக் கடனாக வழங்கப்படுகிறது. அக்கடனை அங்கத்தவர் சுகயீனம் மாறி தொழிலுக்கு சென்ற பின் மீளச்செலுத்தவேண்டும்.இதற்கு வட்டி அறவிடப்படுதில்லை.

03. அடுத்த திட்டமாக ஒரு அங்கத்தவர் 15நாட்களுக்கு மேல் சுகயீனமாக இருந்தால் அவ் அங்கத்தவருக்கு 1000 ரூபா சுகயீன நன்கொடையாக வழங்கப்பட்டு வருகின்றது.

04. ஒரு அங்கத்தவர் வீட்டில் மரணம் ஏற்பட்டால் அந்த அங்கத்தவருக்கு 3000ரூபா மரண இழப்பீட்டு நன்கொடையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்தொகை அங்கத்தவர் ஒருவரின் கால அளவை பொறுத்து எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

05. அடுத்து இடர் காலக்கடன் திட்டமானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணத்தினால்அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குஎமது அமைப்பினால் மூன்றுகட்டமாக இக்கடன் வழங்கப்பட்டது. இத்திட்டமானதுஅமைப்பின் நிதியைப் பொறுத்து அவ்வப்போது ஏற்படக்கூடிய இடர்கால நேரங்களில் அங்கத்தவருக்கு வழங்கப்படும்.

06. மேற்குறித்த திட்டங்களில் பயன்பெற விரும்புவோர் ஆண் அல்லது பெண் நாளாந்த கூலி உழைப்பாளராகவும் வறியவிவசாயியாகவும் இருத்தல்வேண்டும்.சேர்வுப்பணம் செலுத்தி தன்னை அங்கத்தவராக இணைத்துக் கொள்ளல்வேண்டும். அவ்வாறு இணைந்து கொண்ட ஒருவர் மாதந்தோறும் சந்தா செலுத்தி வரவேண்டும். இவை தவிர அங்கத்தவரிடையே நம்பிக்கையானதும் பாதுகாப்பானதுமான சேமிப்புதிட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**கிராமிய உழைப்பாளர் சங்கம்,**
**சேச் அருகாமை, குப்பிளான் தெற்கு**
**புன்னாலைக் கட்டுவான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதாரம்

கே.ரி.கணேசலிங்கம் - விரிவுரையாளர்
அரசறிவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தின் எல்லைகளை நோக்கிய நகர்வு முழுமையடைந்துகொண்டிருக்கிறது. அடுத்துவரும் தசாப்தம் வலுவான அரசுகளினதும் ஆட்சியாளர்களினதும் கொள்கை வகுப்பாளர்களதும் புலமையாளர்களதும் அளவீடுகள் அபிவிருத்திபற்றியதும் அதீதஅபிவிருத்திபற்றியதுவுமாகும். ஒவ்வொரு வளர்ச்சியடைந்த அரசுகளும் 2020ஐ எட்டித்தொடுவதற்குள் 2050ஐ பற்றிய முன்யோசனையைப் பற்றிய உரையாடலை ஆரம்பித்துவிட்டன. ஆனால் வறியநாடுகள் தொழில்நுட்பத்திலோ விஞ்ஞானத்திலோ பரீட்சயமற்ற பின்தங்கிய நாடுகள் அபிவிருத்தியுமின்றி சுயதேவைக்கான நிறைவுமின்றி தத்தளிக்கும் படுபயங்கரமான உலக தரிசனத்தை அடைந்துள்ளன. இத்தகைய நிலை மேலும் அதிகரிக்க நம்பிக்கையின்மை மட்டுமல்ல பழமைக்குள் திரும்புதல் அவசியமானதென்ற வாதம் வறிய நாடுகளிடம் நிகழ ஆரம்பித்துள்ளது. சுதேச உற்பத்தியின் அவசியத்தை வெளிப்படுத்தும் அரசியல் சமூகங்கள் வளரத் தொடங்கிவிட்டன. அதுமட்டுமின்றி வளர்ந்த நாடுகளின் சுதேச உற்பத்தி பற்றி கற்பிதத்தை புரியாமையை வறியநாடுகளின் சாதாரண மக்களே உணர ஆரம்பித்துள்ளர். இதனாலும் வளர்ச்சி நோக்கிய சீனா, இந்தியா, பிறேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளது அனுபவமும் வறியநாடுகளின் அரசியல் சமூகத்தினருக்கு தவிர்க்கமுடியாத அனுபவமாகும். 21ஆம் நூற்றாண்டுப் பொருளாதாரம் எதுவென பொருளாதாரக்கோட்பாட்டுவாதிகளிடம் கேட்டால் பளிச்சிடும் பதில்கள் கிடைக்கும். அவை யதார்த்தத்திற்கும் வறிய நாடுகளின் யதார்த்தத்திற்கும் தகுதியானதா என்ற கேள்வியும் ஏற்படும். அத்தகைய கொள்கைகளை விடுத்து வறியநாடுகளின் அடிப்படை இயல்புகளையும் அவற்றின் அனுமானங்களையும் தவறான அளவீடுகளையும் வெளிக்கொணர்வதன் வாயிலாக யதார்த்தவாத அவசியத்தை உணரமுடியும். அவற்றின் பலவீனங்கள் ஏற்படுத்தியுள்ள அனுபவம் எம்போன்ற நாடுகளுக்கும் தேசங்களுக்கும் அவசியமானது. இன்றைய அரசியல் பொருளாதாரம் எப்படியானது? வெறுமையானது ஏமாற்றுத்தனமானது, போலியானது, வஞ்சகமானது, அதிலும் வறியமக்களை வணிகம் என்ற சொல்லால் கொள்ளையடித்துக்கொண்டிருப்பது, அதற்கு அரசுகளின் ஒத்துழைப்புக்களும் அரசுசாராத அமைப்புகளின் ஒத்துழைப்புக்களும் அரசியல் கொள்கைகளும் உதவுகின்றன. அரசுகளும் ஆட்சியாளர்களும் அயோக்கியத்தனமான பொருளாதார அணுகுமுறைகளை பின்பற்றி அரசினதும் ஆட்சிமுறையினதும் இஸ்த்திரத்தை பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

(தொடரும்)

## தொழிலைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் தொழிற்சங்கங்கள்

தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கான தொழில்களை பாதுகாப்பதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று இந்திய மாக்ஸிச தொழிற்சங்கத் தலைவர் W.R வரதராஜன் அண்மையில் தொழிலாளர் தினத்தன்று அதாவது 01.05.2008 இல் லண்டன பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் பிரதேசங்களில் வாழும் குறிப்பாக வடபுல யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்களைப பொறுத்தமட்டில் மிக மிக யதார்த்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகும். சுமார் 3 தசாப்தங்களுக்கு முன்னர் தெற்கில் மட்டுமல்ல வடபுலத்து யாழ்ப்பாணத்திலும்கூட பல தொழிற்சங்கப்போராட்டங்கள் தொழிலாளர்களினால் முன்னெடுக்கபபட்டது. அதில் குறிப்பான போராட்டங்கள் விவசாயப் பிரதேசங்களில் விவசாயக்கூலி உழைப்பாளர்களால் முனனெடுக்கப்பட்ட கூலி உயர்வுப் போரட்டங்களாகும். அன்றைய காலகட்டத்தில் பல் துறையிலும் தொழில்வாய்ப்புக்கள் வளர்ச்சியடைந்து வந்தது. இதனால் தொழிலாளர்கள் தொழில்வாய்ப்பை பெறுவதற்கு ஏதுவாக இருந்தது. இதன் வளர்ச்சிப்போக்கில் உதிரிகளாக இருந்த தொழிலாளர்கள் ஒன்றிணைக்கப்பட்டனர். தொழிலாளர்கள் பலத்தைப்பெற்றனர். இப்பலம் தொழிலாளர்கள் தமது உரிமைகளை கோரிக்கைகளை பல சவால்களை எதிர்கொண்டு வெல்ல முடிந்தது. இதற்கு தொழில் வாய்ப்பும் ஒரு காரணம் என்றே சொல்லமுடியும். தொழில்வளர்ச்சி ஏற்படும்போது முதலாளி வர்க்கத்திற்கும் அது சார்ந்த அரசஇயந்திரத்திற்கும் தொழிலாளரின் தேவை ஏற்படுகின்றது. ஆனால் இன்று உள்ளநிலமை நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக தொழல் வளங்கள் படிப்படியாக முடக்கப்பட்டும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதாலும் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பை இழந்து வேலைக்கு என்ன செய்வதென்று தெரியாத இக்காலகட்டத்தில் சம்பள உயாவுக்கு போராட்டம் நடத்துவதெ பதைவிட தொழில்வாய்ப்பை எப்படி பெறுவதென்பதே பெரும்கேள்வியாகும்.

இந்தநிலையில் சிந்தித்துக்கொண்டிருக்கையில் வடபுல யாழ்ப்பாணத்தில் இருககின்ற கொஞ்ச நஞ்சத்தொழிலும் இல்லாமல் போகுமா என்று யதார்த்தமாக உணர்ந்து கொள்ள முடிகின்றது. இந்நிலையில் தொழிலாளர்களின் தொழில்வளங்களை பாதுகாப்பதற்கு போராட வேண்டிய கட்டாயமும் அவசியமும் தமிழ்பிரதேசங்களில் வாழும தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

### உழைப்பாளர்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. இவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள புலமை நிலையில் வெளிக கொண்டு வருதல்

3. தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வில் இவர்களின் பங்கினை வெளிக்கொண்டு வருதல்.

இக்கடமைகளை பத்திரிகை நிறைவேற்றுமென்ற நம்பிக்கை எனக்க நிறையவே உண்டு இப்பத்திரிகை வெகுஜனங்களுக்கான பத்திரிகையாக இருப்பதால் கிராமிய உழைப்பாளர்களும், கல்வியில் புலமை குறைந்தவர்களும் வாசிக்கக்குடிய வகையில் பத்திரிகையின் மொழி நடை எளிமையாக இருக்கவேண்டும். எனக்கூறி இப்பத்திரிகை நன்கு வளர்ச்சியுற்ரு கிராமிய உழைப்பாளர்களுக்கு வழிகாட்ட என் ஆசியையும் அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

### தொழிலாளரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரைக்கும் ஒரு உற்ற நண்பனாக இருந்து வழிநடத்திச செல்ல எவருமே இல்லாத, மானிட விடுதலையை தரிசிக்கின்ற ஆவலுடன் இருக்கும் இவர்களுக்கு உற்ற நண்பனாக, உயிர்த்தோழனாக, மக்களோடு மக்களாக நின்று கடமை புரிந்து.

விழுந்தும் விழாமலும் எப்போதும் எந்த நிலையிலும் பல சவால்களை எதிர்கொண்டு உழைக்கும் மக்களின் முன்னேற்றமும் விடுதலையுமே உயிர் மூச்செனக்கொண்டு செயற்பட்டுவரும் கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் அந்த மக்களை அறிவூட்டவும், சமூக அரசியல் பொருளாதாரத் தளத்தில் கௌரவப்படுத்தவும், முதன்மைப்படுத்தவும் என்ற உயரிய எண்ணத்துடன் வெளியிடப்படும் இதயநாதம் பத்திரிகை உழைக்கின்ற தொழிலாள மக்களின் இதயமாக இருந்து ஓங்கி ஒலித்து உதிரிகளாக உள்ள இந்த மக்கள் சமூகத்தை பேரணியாக ஒன்றிணைப்பதற்கு என்றென்றும் இதயத்துடிப்பை இடைநிறுத்தாது இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகின்ற அதே வேளையில் முன்னெடுப் பாளர்களுக்கு என் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

### கஞ்சி....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி))

எங்கும் பரந்து விரிந்திருக்கும் உழைக்கும் வறியமக்கள் ஸ்தாபன பலம் இல்லாமல் உதிரிகளாக நலிவுற்றவர்களாக இருந்தால் எந்தவொரு காலகட்டத்திலும் முன்னேற முடியாது. உரிமைகளை பெறமுடியாது. பொருளாதாரத் தளத்தில் மேல்நிலையை அடையமுடியாது. தொடர்ச்சியாக ஒருவறிய மக்கள் என்ற சமூகம் வாழ நிற்பந்திக்கப்பட்டுக்கொண்டே இருபபோம். ஊரிமைகளை பெறமுடியாது பொருளாதாரத்தி மேல் நிலையை அடையமுடியாது. 'கஞ்சி கஞ்சி என்றால் பானை நிறையாது' சிந்தித்து முன்னேறவேண்டும் என்று மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை பாடிய வரிகளை நினைவிற்கொண்டு ஸ்தாபன ரீதியாக பலமான சக்தியாக்குவதிலேயே உழைக கும் கிராமிய வறிய மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

### யாழில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல மடங்கு அதிகரித்த தொகையாக வழங்கப் பட்டுவருகின்றபோதும் சமுர்த்தி நிவாரணம் இதுவரை அதிகரிக்கப்படவில்லை என்று தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்நிலையில், சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சமுர்த்தி நிவாரணம் பெற்றுவரும் குடும்பங்களுக்கும் உலக உணவுத் திட்டம் போன்ற பல் வேறு நிறுவனங்களின் உதவியுடன் நிவாரணத்தை அதிகரித்து வழங்க யாழ்.மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுப்பாரா என்று யாழ். மாவட்ட மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

**தொடர்பு முகவரி:-**
**சேச் அருகாமை, குப்பிளான் தெற்கு**
**புன்னாலைக் கட்டுவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் வைகாசி - 2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது